செ.வெ.எண்: 20 நாள்: 07.11.2020

**நாமக்கல் மாவட்டம்**

**நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் ஜல் ஜீவன் இயக்க திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.7.56 கோடி மதிப்பீட்டில் 8 ஊராட்சிகளுக்குட்பட்ட 15 குக்கிராமங்களில் ஜல் ஜீவன் இயக்க திட்டத்தின் கீழ் 1,533 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஜல் ஜீவன் இயக்க திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட குக்கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் ஒரே சீரான அழுத்தத்தில் குடிநீர் செல்ல தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதன் காரணமாக கிராமத்தின் உயரம் குறைவான தெரு, உயரம் அதிகமான தெரு உள்ளிட்ட எந்த பகுதியில் வசித்தாலும் அனைத்து வீடுகளுக்கும் ஒரே சீரான குடிநீர் கிடைக்கும்.

ஜல் ஜீவன் இயக்க திட்டப்பணிகளை நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், மரூர்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கரட்டுபட்டி கிராம பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப. அவர்கள் (07.11.2010) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வீடுகளுக்கு குடிநீர் சீரான அழுத்தத்தில் கிடைக்க திட்ட வழிகாட்டியின்படி வால்வுகள் மற்றும் குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா, குடிநீர் குழாய்கள் சரியான முறையில் பதிக்கப்பட்டுள்ளனவா, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்தில் குடிநீர் வழங்க தேவையான அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா, குடிநீர் இணைப்பு வழங்கப்பட்ட வீடுகளில் குடிநீர் சரியாக வருகின்றதா என்று நேரில் பார்வையிட்டு உறுதி செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வீடுகளில் குடிநீர் தொட்டிகளில் பிடித்துவைக்கப்பட்டிருந்த நீரில் டெங்கு கொசுப்புழுக்கள் உள்ளனவா என்று பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், குடிநீர் தொட்டிகளை மூடிவைத்து தண்ணீரை பயன்படுத்த வேண்டும், டெங்கு நோயை உண்டாக்கும் ஏடிஎஸ் கொசுப்புழுக்கள் நல்ல நீரில் மட்டுமே முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்வதால் தண்ணீர் பயன்படுத்தும் பாத்திரங்களை அவ்வப்போது கழுவி தகுந்த முறையில் பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்று பொது மக்களுக்கு அறிவுருத்தினர்.

இந்த ஆய்வுகளின்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ஆர்.தேன்மொழி, திரு.அசோகன், உதவி பொறியாளர்கள் திரு.விஜயகுமார், திருமதி.கலைச்செல்வி, ஊராட்சித் தலைவர் திருமதி.சுசீலா உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**